**27.01.2020**

**பத்திரிக்கை செய்தி**

**2019, டிசம்பர் மாதத்தில் 67,963 பயணிகள் ஷேர் டாக்சி, ஷேர் ஆட்டோ மற்றும் மெட்ரோ சீருந்து இணைப்பு சேவையை பயன்படுத்தியுள்ளனர்.**
**2019, டிசம்பர் வரை 7.18 லட்சம் பயணிகள் இணைப்பு சேவைகளை பயன்படுத்தியுள்ளனர்.**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கடந்த 11.08.2018 முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட மெட்ரோ இரயில் நிலையங்களில் மெட்ரோ இரயிலில் பயணிக்கும் பயணிகளுக்கான பல போக்குவரத்து இணைப்பு நடவடிக்கைகளை வழங்குவதற்கான முன்முயற்சியை மேற்கொண்டு வருகின்றது.

7 மெட்ரோ இரயில் நிலையங்களில் ஷேர் ஆட்டோ இணைப்பு சேவைகள் ரூ.5/- கட்டணத்துடன் குறிப்பிடப்பட்ட பாதையில் இயங்குகின்றது. அதேபோல் ஷேர் டாக்சி சேவைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட மெட்ரோ இரயில் நிலையங்களில் ரூ.10/- கட்டணத்துடன் 3 கிலோமீட்டர் தூரம் வரை இயங்குகின்றன.

டிசம்பர் மாதத்தில் மேற்காணும் மெட்ரோ இரயில் நிலையங்களில் 42,366 பயணிகள் ஷேர் டாக்சி மற்றும் ஷேர் ஆட்டோ வசதிகளை பயன்படுத்தியுள்ளனர். மேலும் டிசம்பர் மாதத்தில் 25,597 பயணிகள் மெட்ரோ சீருந்து இணைப்பு சேவையை பயன்படுத்தியுள்ளனர். மொத்தமாக டிசம்பர் மாதத்தில் 67,963 பயணிகள் ஷேர் டாக்சி, ஷேர் ஆட்டோ மற்றும் மெட்ரோ சீருந்து இணைப்பு சேவையை பயன்படுத்தியுள்ளனர். சுமார் 7,18,003 பயணிகள் இந்த ஷேர் ஆட்டோ மற்றும் ஷேர் டாக்சி சேவைகளை கடந்த 11 ஆகஸ்டு 2018 முதல் 31 டிசம்பர் 2019 வரை பயன்படுத்தியுள்ளனர்.

டிசம்பர் மாதம் ஷேர் ஆட்டோ மற்றும் ஷேர் டாக்சி சேவையை பயன்படுத்திய பயணிகளின் எண்ணிக்கை

**ஷேர் டாக்சி**

| | | | |
|---|---|---|---|
| 1. | அண்ணாநகர் கிழக்கு | - | 582 |
| 2. | கோயம்பேடு | - | 1458 |
| 3. | ஆலந்தூர் | - | 1019 |
| 4. | வடபழனி | - | 982 |
| 5. | திருமங்கலம் | - | 537 |
| | | | 4578 |

**ஷேர் ஆட்டோ**

| | | | |
|---|---|---|---|
| 1. | கிண்டி | - | 11803 |
| 2. | திருமங்கலம் | - | 6287 |
| 3. | ஆலந்தூர் | - | 5243 |
| 4. | சின்ன மலை | - | 4214 |
| 5. | ஈக்காட்டுத்தாங்கல் | - | 4631 |
| 6. | கோயம்பேடு | - | 2370 |
| 7. | பரங்கிமலை | - | 3240 |
| | | | 37788 |

மேற்கண்ட வசதிகளுடன் கூடுதலாக, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கடந்த 05.08.2019 முதல், சென்னை மெட்ரோ இரயில் செயலி வழியாக சீருந்து இணைப்பு சேவை கீழ்க்கண்ட 16 மெட்ரோ இரயில் நிலையங்களில் பயன்பாட்டில் உள்ளது. இந்த இணைப்பு சேவை ஒவ்வொரு மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்தும் 6 முதல் 8 கி.மீ தூரம் வரை செயல்படும். இந்த வசதியை பயன்படுத்துவதற்கான ஒரே கட்டணம் ரூ.10/- மட்டுமே.

டிசம்பர் மாதம் மெட்ரோ சீருந்து இணைப்பு சேவையை பயன்படுத்திய பயணிகளின் எண்ணிக்கை

| | | | |
|---|---|---|---|
| 1. | நந்தனம் | - | 1390 |
| 2. | ஏஜி – டி.எம்.எஸ் | - | 1577 |
| 3. | ஆயிரம் விளக்கு | - | 589 |
| 4. | எல்.ஐ.சி | - | 895 |
| 5. | அரசினர் தோட்டம் | - | 2120 |
| 6. | விமான நிலையம் | - | 12430 |
| 7. | செனாய் நகர் | - | 464 |
| 8. | வண்ணாரப்பேட்டை | - | 2021 |
| 9. | தேனாம்பேட்டை | - | 1026 |
| 10. | நங்கநல்லூர் சாலை | - | 502 |
| 11. | அரும்பாக்கம் | - | 174 |
| 12. | நேரு பூங்கா | - | 1050 |
| 13. | அண்ணா நகர் கோபுரம் | - | 180 |
| 14. | கீழ்ப்பாக்கம் | - | 569 |
| 15. | சைதாப்பேட்டை | - | 424 |
| 16. | கிண்டி | - | 186 |
| | | | 25597 |

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் அனைத்து 32 மெட்ரோ நிலையங்களிலும் சீருந்து இணைப்பு சேவையை விரைந்து செயல்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது.